★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 வைகாசி 2 ஷஃப 2 இதழ் 94

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 16—5—83

## யாழ்.மாநகராட்சிமன்ற 21 கூட்டணிவேட்பாளர்கள் வாபஸ் பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

இளைஞர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து 18ம் திகதி நடைபெறவிருக்கும் யாழ் மாநகராட்சி மன்றத் தேர்தலில் இருந்து விலகிக் கொள்வதாகத்தெரிவித்து தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில்போட்டியிடும் பத்து வேட்பாளர்கள் கூட்டாக அறிக்கை விடுத்துள்ளனர்.

திரு சுந்தரம்சண்முகராசா(14வது இடம்), திரு பெஞ்சமின் ஜேக்கப் (15வது இடம்), திரு. செல்லப்பா குமாரவேலு (13வது இடம்), திரு. எஸ். டி. செல்வத்துரை, [5வது இடம்], திரு நீக்கிலாப் பிள்ளை அன்ரனிப்பிள்ளை [3வது இடம்], திரு சு.சிறில் [20வது இடம்], திரு. கனகரத்தினம் சிவபாதசுந்தரம் [31வது இடம்], திரு. தேவசகாயம் பிரான்சிஸ் திருவானந்தம் [11வது இடம்] ஆகிய எட்டுப் பேரும்போட்டியிலிருந்து விலகுவதாகத் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் 'தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தமிழ் ஈழலட்சியத்துக்கும் விசுவாசமாக இருப்போம் என்றும் இது தனிப்பட்ட முடிவே அன்றி கூட்டணியின் முடிவல்ல என்றும் குறிப்பிட்டுள்ளதுடன் வட்டார மக்களும் இயக்கமும் காட்டிய ஆதரவுக்கும் அவர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்

### பிந்திய செய்தி

கூட்டணி வேட்பாளர்களான திரு. வேலுப்பிள்ளை அப்பையா (21வது இடம்) திரு. செபஸ்தி அமிர்தநாதன்

(8 ம் பக்கம் பார்க்க)

# பேராதனைச் சம்பவம்: சி. ஐ. டி. விசாரணை

## 'அமிர்' கோரிக்கைமீது நடவடிக்கை

(பேராதனை)

**பேராதனை பல்கலைக்கழக தாக்குதல் சம்பவம் தொடர்பாக பூரணவிசாரணை நடத்துமாறு பாதுகாப்பு அமைச்சு விடுத்த பணிப்புரையின்மீது, சி ஐ. டி. பொலிஸார் இப்பொழுது விசாரணை மேற்கொண்டுள்ளனர்.**

பேராதனைப் பல்கலைக்கழகத்தில், தமிழ் மாணவர்கள் சிங்கள மாணவர்களினால் தாக்கப்பட்டது குறித்து நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியையும், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுத் தலைவரையும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் தந்தி மூலம் கோரியதைத் தொடர்ந்தே மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

உண்மை நிலையைக் கண்டறியும் பொருட்டு புதிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு அமைச்சு பணித்ததைத் தொடர்ந்து இரகசியப் பொலிஸார் புதிதாக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

நிலைமை இவ்வாறிருக்க, பேராதனை அக்பர் மண்டபத்துக்கு அருகில், தமிழ் விரிவுரையாளர் பொருளாதாரம்) ஒருவர் நேற்று முன்தினம் தாக்கப்பட்டுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

## கமலம் கொலைவழக்கு இன்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ரியூட்டரி மாணவி கமலம் இராமச்சந்திரன் கொலைவழக்கு தொடர் விசாரணை இன்று யாழ் மேல்நீதி மன்றத்தில் நீதிபதி திரு ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் நடைபெறவுள்ளது.(மா)

## யாழ்அபிவிருத்தித்திட்டங்கள் ஜெர்மன் நிபுணர் திருப்தி

### யாழ். செயலகத்தில் இன்று மாநாடு

[யாழ்ப்பாணம்]

இலங்கை வந்துள்ள ஜெர்மன் அபிவிருத்தி ஸ்தாபனத்தைச் சேர்ந்த திரு. போல்ஜே பெனடிக்ஸ் நேற்றுமுன்தினமும் நேற்றும் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகளைப் பார்வையிட்டு பாராட்டுத் தெரிவித்தார்.

பாஷையூர் மீன்பிடித்துறைமுகம், மகாதேவா தாம்போதி வேலை, திருநெல்வேலியிலுள்ள பால்பண்ணை, கால்நடை உணவு உற்பத்தி நிலையம், உயிர்வாயு உற்பத்தி நிலையம், பாற்சேகரிப்புநிலையம் மொண்டசவில் நெசவாலை நிலையம் ஆகியவற்றை திரு. பெனடிக்ஸ் பார்வையிட்டு இவையெல்லாம் நல்லமுறையில் செயல்படுவதாக பாராட்டினார்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் உள்ளு

[8ம் பக்கம் பார்க்க]

## "பனாகொடைமுகாமில் காந்தீயத்தலைவர்கள் சித்திரவதை: உடன் விசாரணை செய்க"

### ஜனாதிபதிக்கு கூட்டணி எம் பி.க்கள் தந்தி

[யாழ்ப்பாணம்]

"பனாகொடை இராணுவ தடுப்புமுகாமில், காந்தீய இயக்கத் தலைவர்களான டாக்டர் ராஜசுந்தரம், டேவிட் ஆகியோர் கடுமையாகத் தாக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர் இது தொடர்பாக உடன் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவும்"

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கு கூட்டணி எம். பிக்களான திரு எம். சிவசிதம்பரம், திரு வி. யோகேஸ்வரன், திரு. வி. தர்மலிங்கம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், ஆகியோர் அனுப்பியுள்ள தந்தியில் கேட்டுக்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

அத்தந்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது! "காந்திய இயக்கத் தலைவர்

[8ம் பக்கம் பார்க்க]

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் யாழ். பொலிஸ் நிலையத்தில் விசேட தகவல் பிரிவு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சித் தேர்தலை ஒட்டி யாழ். பொலிஸ் நிலையத்தில் மேல் மாடியில் விசேட 'ரேடியோ லயலர்ஸ்'

[8ம் பக்கம் பார்க்க]

உ

ஷஷ்டியப்த பூர்த்தி முகூர்த்த (மணிவிழா) அழைப்பு

அன்புடையீர்,

எனது தகப்பனார் ஆனைக்கோட்டை ஸ்ரீமுத்துநயினார் கோயில் பிரமஸ்ரீ அகோரசிவாச்சாரியார் என்கிற சிவஸ்ரீ சு. கைலாசநாதக்குருக்கள் (பாப்பாக்குருக்கள்) அவர்களின் ஷஷ்டியப்த பூர்த்திவிழா ஸ்ரீமத் பாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரப் பெருமான் திருவருளால் நாளது ருத்ரோத்காரி வருஷம் வைகாசி மாதம் 5ம் திகதி (19-5-1983) வியாழக்கிழமை பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதி இல. 411ம் இல்லத்தில் (சிவதொண்டன் நிலையம் முன்பாக) நிகழ இருப்பதால் தாங்கள் சுற்றம்சூழ வருகை தந்து சிறப்பிக்க வேண்டிக்கொள்கிறோம்.

அன்பான வரவை எதிர்பார்க்கும்.
கை. சோமசுந்தரம் தம்பதிகள்
ஸ்ரீ முத்துநயினார் கோயில் ஆனைக்கோட்டை
[தனிப்பட்ட அழைப்புகள் இல்லை] (7217)

## பருத்தித்துறை நகரசபை கூட்டணி வேட்பாளர் 12 பேரும் கூட்டாக வாபஸ்!

(புலோலி)

பருத்தித்துறை நகரசபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடும் பன்னிரண்டு (மொத்த) வேட்பாளர்களும், போட்டியிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளனர்.

பருத் பருத்தித்துறை நகரசபைத்தேர்தலில் போட்டியிடும் கூட்டணி முதல் வேட்பாளர் சட்டத்தரணி மயில்வாகனம் வேலும்மயிலும் நேற்று முன்தினம் வாபஸ் பெற்றது குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறை தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் திரு எஸ். கிருஷ்ணசிங்கத்திடம், கூட்டணி வேட்பாளர்கள் பன்னிரண்டுபேரும் கூட்டாக சமர்ப்பித்துள்ள அறிக்கையில், போட்டியிலிருந்து தாங்கள் விலகிக்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

மலிவு விற்பனை

ரயர்கள்

ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 75% மேல் பாவனைக்குரிய ஒரிஜினல்

டயர்கள் 700 × 15
750 × 15

டயர் டீலர்ஸ்

பிரதான வீதி, நெல்லியடி.
7226 தொலைபேசி: 800 கரவெட்டி.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

தமிழ், ஆங்கில புதிய, பழைய தட்டச்சு யந்திரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: நிர்வாகி - சங்கர் காட்லி இன்ஸ்ரிரியூட், பிரதான வீதி, பருத்தித்துறை. 7011

பலாலி றோட் 2ம் ஒழுங்கையில் 2 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு இருக்கிறது. தொடர்பு; K. கந்தசாமி 44/2 கொலிச் றோட், நீராவியடி யாழ்ப்பாணம். 7199

நல்லூரில் சமீபத்தில் கட்டப்பட்ட வீடு சுண்டிக்குளியில் வீடு கட்டுவதற்கேற்ற காணி. தொடர்பு கொள்ளவும். இ. பாலசுப்பிரமணியம் சட்டத்தரணி 52 வைமன் வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி. 22334 7257

பிடவை வியாபாரத்தில் அனுபவம் மிக்க ஆண் விற்பனையாளர்கள் தேவை. விபரங்கட்கு நேரில் வரவும். சிமாட்டி ரெக்ஸ்ரைல் இல; 122 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 7190

தொலைபேசி சுத்தப்படுத்தும் சேவைக்குப் பெண் ஊழியர் தேவை. விண்ணப்பிக்கவேண்டிய முகவரி; விளம்பர இல. 7243 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 7243

கோப்பாயில் 30 பரப்புக் காணி மின் இணைப்புடன் தொழில் ஸ்தாபன வசதிக்குரியது தொடர்பு: பாலசுப்பிரமணியம், பழனி கோவிலடி, கோண்டாவில். 7265

புறேயிலேர்ஸ் விற்பனைக்கு உண்டு விபரங்கட்கு தொடர்பு கொள்க: K. விக்னேஸ்வரன், நஸனல் பாம்ஸ், இந்துக் கல்லூரி அவனியு, உரும்பராய். (இந்துக் கல்லூரிக்கு அருகாமையில்) 7263

## காணவில்லை

E N 8643 இலக்கமுள்ள மொறிஸ்மைனர் காரினுடைய இன்சூரன்ஸ், (ரக்ஸ்) Tax, கார்ச் சாரதியின் லைசென்ஸ் அடங்கிய பை (Purse) தவற விடப்பட்டுள்ளது கண்டெடுப்பவர்கள் தயவு செய்து மணிக்கூட்டு வீதியில் உள்ள Jaffna பார்மஸியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். 7262

## பெயர் மாற்றம் அறிவித்தல்

யாழ்ப்பாணம் அரியாலை 114 திருமகள் வீதியைச்சேர்ந்த செல்வி சிவக்கொழுந்து சபாரத்தினம் ஆகிய நான், இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் சட்டவாக்கங்களுக்கு அமைவாக, இன்றிலிருந்து, எனது பெயரை செல்வி சபாரத்தினம் சிவாஜினி என மாற்றியுள்ளேன் என்பதை அறிவித்துக் கொள்கின்றேன். எனவே, மேற்கொண்ட பெயரைப் பாவிப்பதில் ஆட்சேபங்கள் இருப்பின் என்னுடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டுகிறேன்.

செல்வி சிவாஜினி சபாரத்தினம்,
114, திருமகள் வீதி.
அரியாலை, யாழ்ப்பாணம்,
7255

## தேவை

விக்லம் பழம் தேவை. மில்க்வைற், யாழ்ப்பாணம். 7264

## தவறிவிட்டது

9-5-83 ல் யாழ்ப்பாணம் - கொழும்பு றெயினில் கோண்டாவிலுக்கும் மருதனார்மடத்துக்கும் இடையில் FO/9264 இலக்கம் உடைய கடவுச் சீட்டு (Passport) தவறிவிட்டது. கண்டு எடுத்தவர் தயவுசெய்து தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். P பாலசுப்பிரமணியம், ஸ்ரேசன் றோட், கோண்டாவில். 7259

## பயிற்சி

யாழ் நகரிலுள்ள ஒரு பிரபல நிறுவனத்தில் "Business Management" பயிற்சி வகுப்பு ஆரம்பமாகவுள்ளது. பயிற்சிக் காலம் மூன்று மாதம். பயிற்சிக்கட்டணம் ரூபா 500/- மட்டும் விபரங்களுக்கு 18-5-83 முன்பாக விண்ணப்பிக்கவும். விளம்பர இல; 7216 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 7216

றெவிஜிசன் றிப்பியறிங், ஏயர் கொண்டிசனிங் Pipe Fitting, வயறிங், Hotel Management பயிற்சி ஆரம்பம்: 20-05-83 விபரத்திற்கு The School of Computer Studies 52/1 கனகரத்தினம் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7222

## வலி-கிழக்கு. தெ. ப. ப. நோ. கூ. சங்கம் நீர்வேலி ஏலவிற்பனை

மேற்படி சங்கத்தால் 21-05-83ம் திகதி சனிக்கிழமை மு. ப. 10-00 மணிக்கு ஏல விற்பனை மூலம் பின்வரும் பொருட்கள் சங்க வளவினுள் வைத்து விற்கப்படவுள்ளன. தேவையானோர் ஏலவிற்பனையில் பங்கு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

1. லொறி உதிரிப் பாகம், றேடியேற்றர்
2. வெற்று றம்
3. சீமெந்து கலக்கும் இயந்திரம்
4. கைத்தறிகளும், உதிரிப் பாகங்களும்.
5. பவுடர், குடை மற்றும் ஏனைய கழிவுப் பொருட்களும்

பொதுமுகாமையாளர்
நீர்வேலி,
1983-05-13. 7258

## ஆலய தர்மகர்த்தாக்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ் - பருத்தித்துறை வீதி ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் தர்மகர்த்தாக்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

திரு க. பொன்ராசா, திரு. இ நடராசா, திரு மா கனகரத்தினம், திரு. மா. பூலிங்கம், ஐ முருகு. [மா]

## உற்சவம்

[அச்சுவேலி

பத்தமேனி-பாரதி வீதியில் உள்ள சங்கிலி வைரவர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை நாளை காலை கொடியேற்ற உற்சவத்துடன் ஆரம்பமாகவுள்ளது. 26ம் திகதி தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது.

பத்துத்தினங்களும் இரவு சங்கீதஉபந்நியாசங்களும் கதாப் பிரசங்கங்களும் இடம்பெறும்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை கல்வியில் பட்டப்பின் டிப்ளோமாவிற்கு அனுமதிப்பதற்கு தனியார் பாடசாலைகளிலிருந்து விண்ணப்பம் 1983/84 (தமிழ்மொழிமூலம்)

தனியார் பாடசாலை ஆசிரியர்களிடமிருந்து கல்வியில் பட்டப்பின் டிப்ளோமாவிற்கு தேர்வு நாடிகளைச் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் மே மாதம் 31ம் திகதி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இப்பயிற்சி நெறி 1983 ஒக்டோபரில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்பயிற்சி நெறியின் காலம் ஓராண்டாகும்.

விண்ணப்பதாரி அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாக இருப்பதுடன், ஆசிரியசேவையிலோ, அல்லது இலங்கைக்கல்விச் சேவையிலோ பட்டதாரிகளாக ஆசிரிய நியமனம் பெற்றோர் குறைந்த பட்சம் மூன்றாண்டுச் சேவையைக் கொண்டவர்களாகவும் ஏனையோர் ஐந்தாண்டுச் சேவையைக் கொண்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களையும் ஏனைய விபரங்களையும் கல்விக் கிளையின் உதவிப்பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் இப்படிவங்களைப்பெற விரும்புவோர் 23 X 10 செ மீ அளவுள்ள சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பெற்ற கடிதவுறையை அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.
11-05-1983. 7260

## ஹோம் பிறுன்ஸ் லிமிட்

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பிறுன்ஸ் லிமிட், 82, கன்னாதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிறுன்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்
II. வெள்ளை பொப்பிளின்
III. பிறின்ரெட் பப்றிக்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

ஹோம் பிறுன்ஸ் லிமிட்
82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (போன்: 24310)

தலைமைக் காரியாலயம்
ஹோம் பிறுன்ஸ் லிமிட்
463, காலி வீதி, கொழும்பு-3

## வீடமைப்பு உபகுழு தெரிவு

(அச்சுவேலி)

கோப்பாய் பிரதேச சபையின் வீடமைப்பு உப குழு ஒன்று கோப்பாய் பிரதேச சபைக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்டது.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக் கலந்துரையாடல் மண்டபத்தில் திரு. ச. லோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பின்வருவோர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர் திரு. ச. லோகேஸ்வரன், திரு. க. இராசதுரை, திரு. க. இ. குமாரசுவாமி (அ)

## பதவி வெற்றிடம்

(1) எழுதுவினைஞர்கள்
(2) தட்டெழுத்து லிகிதர்
(3) தட்டெழுத்து சுருக்கெழுத்து ஆசிரியர்கள்
(4) காசாளர்

விண்ணப்ப முடிவு திகதி: 21-5-83.

DARMANANDA INSTITUTES
250, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## கடைகள் வாடகைக்கு

கே. கே. எஸ், றோட்டை முகப்பாகக்கொண்ட புதுக்கடைகள் கட்டப்படுகின்றன.
அக்கடைகளில் பல ஏற்கனவே பதிவுசெய்யப்பட்டுவிட்டன.
ஆகவே மிகுதியாகவுள்ள கடைகளையும் வெகு சிக்கிரமாகப் பதிவுசெய்யுங்கள்.
மேலும் விபரங்களுக்கு:
முதல்வர்,
சி. எஸ். கே. ஸ்தாபனம்,
திருமகள் அரிசி ஆலை,
133, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். [7140]

வெளிநாடு செல்கிறீர்களா?

உங்கள் விமான பயணச் சீட்டுக்களை எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளுங்கள்.

விபரங்கட்கு:-

தமிழன்ஸ் கம்பனி லிமிட்டெட்
249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 23680

BUILDING TECHNOLOGICAL INSTITUTE
கட்டிடத் தொழில் நுட்பவியல் நிறுவனம்

(கட்டிடக் கலைஞர்களாலும் பொறியியலாளர்களாலும் இலங்கையில் நன்மதிப்பைப் பெற்ற ஒரே ஒரு நிறுவனம்)

136, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அனுபவமும் திறமையும் வாய்ந்த பொறியியலாளர்களால் அறிமுகப்படுத்துகிறோம்

C. E. I. Part I and City and Guilds (Lond)

ஆரம்பம்: 16-05-83 மாலை 4-30 மணிக்கு

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பைத் தேடிச் செல்லும் திறமைசாலியான இளம் வாலிபர்களுக்கு முதன்முறையாக யாழ் நகரில் அறிமுகப்படுத்த இருக்கும் கிழமை நாள் வகுப்புகள்

1. Diploma in Carpentry (தச்சுவேலை) 6 மாதம்
2. Diploma in Masonary (மேசன் வேலை) 6 மாதம்

தெரிவு செய்யப்படுவோர் 2 மாத போதனா பயிற்சியையும் 4 மாத வேலைகளப் பயிற்சியையும் பெறுவார்கள்.

வேலைக்களப்பயிற்சியின்போது நாள் ஒன்றுக்கு ரூபா 10/-க்கு குறையாத அலவன்ஸ் வழங்கப்படும்

ஆரம்பம்: 18-05-83 காலை 9-00 மணி

[7251]

# கடந்த ஆண்டு வெளியேறிய பின்னர் பாலஸ்தீன தலைவர் அரபாத் மீண்டும் பெய்ரூட் விஜயம்!

## கதிரவேற்பிள்ளை சிலைபூர்த்தி

(அச்சுவேலி)

அமரர் கதிரவேற்பிள்ளையின் சிலை அமைப்பு வேலைகள் முடிவுற்றுள்ளன.

சிலை நிறுவுவதற்கான அனுமதியை யாழ் மாநகராட்சி மன்றம் வழங்கியுள்ள போதிலும் உள்ளூராட்சி நாடு நகர நிருமாண அமைச்சின் அனுமதியும் கிடைக்க வேண்டியிருப்பதால் தாமதமேற்பட்டுள்ளதாக சிலை அமைப்புக்குழுவினர் தெரிவித்தனர். (அ)

## அமெரிக்கத் திட்டத்தை ஆதரிக்க லெபனன் முடிவு!

பெய்ரூட், மே, 15

கடந்த ஆண்டு இஸ்ரேலியப் படைகளுடனான கடும் மோதலையடுத்து பெய்ரூட்டிலிருந்தும் வெளியேறிய பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத் நேற்று முதற்தடவையாக மீண்டும் பெய்ரூட் வந்தார்.

வடக்கு, கிழக்கு லெபனனில் இருந்துவரும் பாலஸ்தீன இயக்க கமாண்டோ வீரர்களைப் பார்வையிடவே தலைவர் அரபாத் இந்த விஜயத்தை மேற்கொண்டார் என பி. எல். ஓ. வட்டாரங்கள் தெரிவித்தன. ஆயினும் அவரது இவ்விஜயத்தின் ஏற்பாடுகள் மற்றும் அவர் லெபனனில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து அவை எதுவும் தெரிவிக்கவில்லை.

லெபனனின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் சுமார் ஆறாயிரம் முதல் எண்ணாயிரம் வரையிலான பாலஸ்தீன கமாண்டோக்கள் இருந்துவருகின்றன. இவை லெபனனில் நிலைகொண்டுள்ள சுமார் ஐம்பதினாயிரம் சிரியத் துருப்புக்களுக்கு உதவிவருகின்றன.

இது இவ்வாறிருக்க, லெபனனிலிருந்து சகல அந்நியத் துருப்புகளையும் வெளியேற்றுவது சம்பந்தமாக அமெரிக்கா தயாரித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட லெபனன் முன்வந்துள்ளது.

நேற்று லெபனன் ஜனாதிபதி திரு அமின் ஜமாயல் தமது அமைச்சரவையில் அமெரிக்கத் திட்டம் குறித்து நன்கு பரிசீலித்த பின்னரே அதனை ஆதரிக்க முடிவுசெய்தார்.

சிரியா இத்திட்டத்தை நிராகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. லெபனன் அரசிடமும் இத்திட்டத்தைத் தாம் ஆதரிக்காதது குறித்து சிரிய ஜனாதிபதி விளக்கியிருந்தார். சிரியா அமெரிக்கத் திட்டத்தை நிராகரித்தது குறித்தும் லெபனன் மந்திரிசபையில் ஆராயப்பட்டது. இறுதியாக லெபனன் அரசு நேற்று தனது காலை ஒலிபரப்புச் சேவையின் இடையே குறுக்கிட்டு தான் அமெரிக்கத் திட்டத்தை ஆதரித்து அது குறித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்போவதாக அறிவித்தது.

லெபனனில் தற்போது 30 ஆயிரம் இஸ்ரேலியத் துருப்புகளும், 50 ஆயிரம் சிரியத் துருப்புகளும், 12 ஆயிரம் பாலஸ்தீனிய கமாண்டோக்களும் இருந்து வருகின்றன. அமெரிக்காவின் பாதுகாப்புத் திட்டம் இந்த அந்நியத் துருப்புகள் அனைத்தையும் ஏககாலத்தில் லெபனனிலிருந்து வெளியேறக் கோருவதாக இருக்கின்றது. (கி)

## வளைகுடா நெருக்கடிகளை சமாளிக்க புதிய கூட்டம்!

புதுடில்லி, மே, 15

ஈரானின் இரு எண்ணெய்க் கிணறுகளிலிருந்து விரயமாகிக் கொண்டிருக்கும் எண்ணெயைக் கட்டுப்படுத்துவது, ஈரான், ஈராக் போரை முடிவுக்குக் கொண்டுவருவது குறித்து புதிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

இம்முடிவுகளை எடுக்க ஆறு வளைகுடா நாடுகள் கூடவுள்ளன அவைத், ஐக்கிய அரபு இராச்சியம், ஓமான், கட்டார், பஹ்ரெய்ன், சவூதி அரேபியா ஆகியனவே இந்த ஆறு நாடுகளாகும்.

ஈரான் எண்ணெய்க் கிணறுகளின் எண்ணெய் வெளியேற்றம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது வளைகுடா நாடுகளின் கரையோரங்கள் இவ்வெண்ணெய்ப் படிவுகளால் சூழ்ந்துள்ளன. அத்துடன் அந்நாடுகளின் குடிநீர் சேகரிக்கும் வலயங்களும் இந்த எண்ணெய் விரயத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே இந்த எண்ணெய் விரயத்தைத் தடுத்து மேலும் ஆபத்து ஏற்படாதிருக்கவும், 30 மாத ஈரான், ஈராக் போரை முடிவுக்குக் கொண்டு வரவும் எதிர்வரும் 18ம் திகதி மேற் குறிப்பிட்ட ஆறு நாடுகளும் கூடவிருக்கின்றன. (கி)

## இடிமுழக்கத்துடன் தமிழகத்தில் கடும் மழை!

சென்னை, மே, 15

இடி முழக்கத்துடன் பெரும் மழை தமிழ்நாடு முழுவதிலும் பெய்துவருகின்றது சென்னையில் நேற்றுக்காலை கடும்மழை பொழிவு எட்டரை மணியிலிருந்து பல மணி நேரமாகக் காணப்பட்டது.

கடும் வரட்சியால் பாதிக்கப்பட்ட மதுரை மாவட்டத்திலும் பலத்த மழைப்பொழிவு காணப்பட்டது. இங்கு நேற்று முன்தினம் 30 முதல் 80 மில்லிமீட்டர்வரையிலான மழைப்பொழிவு பதிவுசெய்யப்பட்டது.

'வைகை' அணையிலும் நீர் மட்டம் நான்கு அடியாக உயர்ந்துள்ளது இதனையடுத்து 12 அடியாக இருந்த நீர்மட்டம் 16.7 அடியாக உயர்ந்துள்ளது.

பழநி, திண்டுக்கல் போன்ற கடும் வரட்சிக்குட்பட்ட பகுதிகளிலும் நல்ல மழை வீழ்ச்சி காணப்படுகிறது. இப்பகுதி விவசாயிகள் தானிய விதைப்புகளை ஆரம்பித்துள்ளனர். (கி)

தடைசெய்யப்பட்ட இயக்கப் பிரசுரம்

## மன்னார் ஐ.தே.க. பிரமுகருக்கும் பொலிசாருக்கும் கிடைத்தன!

(மன்னார்)

வடபகுதியில் தடைசெய்யப்பட்டுள்ள இயக்கம் ஒன்றினால் வெளியிடப்பட்டுள்ள துண்டுப்பிரசுரங்கள் மன்னார் மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கும் சில ஐ. தே. கட்சி பிரமுகர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன

மன்னார் மாவட்டத்திலுள்ள முருங்கன் மன்னார் தலைமன்னார் ஆகிய பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த துண்டுப்பிரசுரங்கள் காங்கேசன்துறைப் பகுதியிலிருந்து தபாலில் சேர்க்கப்பட்டிருந்தன

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ஐ. தே. கட்சி பிரமுகர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த துண்டுப்பிரசுரங்கள் மன்னாரில் வைத்தே தபாலில் சேர்க்கப்பட்டிருந்தன. (அ)

## தாவர உணவுகளில் புற்றுநோய் எதிர்ப்புசக்தி!

நியுயோர்க், மே. 15

தாவர உணவுவகைகளில் புற்றுநோய் எதிர்ப்புச் சக்தி கணிசமாகக் காணப்படுவதாக நியுயோர்க் பல்கலைக்கழக பேராசிரியர் வோல்டர் தெரிவித்துள்ளார்.

சோயா அவரை போன்ற சிறுதானியவகைகளே புற்றுநோயை எதிர்க்கும் பயிர்வகைகளில் முக்கியம் வாய்ந்தவையாகும் என்றும் பேராசிரியர் வோல்டர் கூறினார்.

தாவர உணவுவகைகள் புற்றுநோயை எதிர்க்கும் விதம்பற்றிய ஆராய்ச்சியை பேராசிரியர் எலிகளில் முதலில் நடத்தினார். அந்த ஆராய்ச்சிகளில் புற்றுநோய் எதிர்ப்பில் தாவரவகைகள் கொண்டுள்ள முக்கியத்துவத்தை அவர் அறிந்தார். இதனையடுத்தே அவர் புற்றுநோயை எதிர்க்கும் சக்தியை தாவரவகையில் கொண்டுள்ளன என்பதை உறுப்படுத்தினார்

பேராசிரியர் வோல்டர், சோயா அவரை மார்புப் புற்று நோயை எதிர்க்கும் வல்லமையுடைய தென்றும் குறிப்பிட்டுள்ளார். (கி)

## கனடியப் பிரதமர் அமெரிக்கா மீது கண்டனம்

லண்டன், மே, 15

சோவியத் யூனியனை அமெரிக்கா அணுகும் முறையைக் கனடியப் பிரதமர் திரு. ட்ரூடோ கண்டித்துள்ளார்

கனடியப் பத்திரிகை யொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே அவர் தனது கண்டனத்தை வெளியிட்டார். திரு ட்ரூடோ, அமெரிக்கா சோவியத்துடனான பேச்சுக்களில் அக்கறை காட்டவேண்டும் அத்துடன் சில கருத்துக்களை விட்டுக் கொடுக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார். [கி]

## ஆறு ஆபிரிக்க நடுகள் வேண்டுகோள்

நைரோபி, மே, 15

அங்கோலாவிலிருந்து தென்னாபிரிக்கத் துருப்புகளை உடன் வெளியேறுமபடி ஆறு ஆபிரிக்க நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன

பொட்ஸ்வானா, மொசாம்பிக், ஸாம்பியா, ஸிம்பாப்வே கென்யா, தன்சானியா ஆகியன இந்தநாடுகளாகும்.

இவை நமீபியாவிலிருந்து கியூபா துருப்புகளை வெளியேறு படி அமெரிக்கா கோருவதையும் எதிர்த்துள்ளன. (கி)

## இந்திரா-சரண்சிங் பேச்சு

புதுடில்லி மே. 15

லோக்தள் கட்சித் தலைவர் திரு சரண்சிங் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியுடன் புதுடில்லியில் நேற்று பேச்சுக்களை நடத்தினார் இவரின் பேச்சுக்கள் ஒரு மணி நேரம் வரை நீடித்தது

இப்பேச்சுவார்த்தையின் இறுதியில் பத்திரிகையாளர்களுக்கு திரு. சரண்சிங் பேட்டியளித்தார் அப்பேட்டியில் தாம் பஞ்சாப் நிலவரம் குறித்தே திருமதி காந்தியுடன் அதிகம் பேசியதாகவும் உடனடியாக அப்பிரச்னையை தீர்க்குமாறு கேட்டுக் கொண்டதாகவும் அவர் கூறினார்.

## மற்றுமொரு சாதனை

கார்ட்மண்டு, மே, 15

இரு அமெரிக்க மலையேறும் வீரர்கள் நேபாள வழிகாட்டி ஒருவருடன் இமயத்தின் அதி உயர்ந்த சிகரத்தை அடைந்துள்ளனர்

இவர்கள் ஒருவாரத்திலேயே இந்த உயரத்தை அடைந்துள்ளனர். உலகில் இவ்வாறு ஒருவாரத்தில் அந்த உயரத்தை எட்டிய இரண்டாவது மலையேறும் பயணம் இம்மூவருடையது என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## ஆலால் வீடு திரும்பினார்

(யாழ்ப்பாணம்)

கடந்த பெப்ரவரி மாதம் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி படுகாயமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த கோப்பாய் எம். பி. திரு ஆ. மு ஆலாலசுந்தரம் நேற்று முன்தினம் தமது இல்லத்துக்குத் திரும்பியுள்ளார்

திரு. ஆலாலசுந்தரம் 83 நாட்கள் யாழ் ஆஸ்பத்திரியிலிருந்து சிகிச்சைபெற்று வந்தார் பூரண சுகமடையாத போதிலும், நடமாடி வேலைகளை மேற்கொள்ளாத வகையில் வீட்டில் ஓய்வெடுத்துக் கொள்ளவேண்டுமென்ற வைத்திய நிபுணர்களின் ஆலோசனைக்கிணங்க வீடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். மேலும் பூரண சுகமடைய ஒருமாதம் செல்லுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

திரு. ஆலாலசுந்தரம் தமது வீட்டுக்குச் செல்வதற்கு முன்னர் யாழ்ப்பாணத்திலுள்ள ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டார். [மா]

உள்ளூராட்சிமன்றத்

## தேர்தலை ஒத்திவைத்து தமிழர் பிரச்னையைத் தீர்க்கவேண்டும்"

### கம்யூ. கட்சி யாழ். கிளை தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்களை ஒத்திவைத்து, தமிழர்களுடைய பிரச்னைகளை அரசியல் ரீதியாக தீர்ப்பதற்காக உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்தைக் கோருவதென இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டக் குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எல்லா வேட்பாளர் பட்டியல்களிலிருந்தும் வாபஸ்பெற்றுக்கொள்ளும் அபேட்சகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது என்றும், இன்றைய சூழ்நிலை சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் வாக்களிப்பதற்கு உகந்ததல்ல என்றும் தமிழர்களின் பிரச்னைகளை இராணுவ ரீதியான நடவடிக்கைகளினால் தீர்க்கமுடியாது என்றும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளை அங்கீகரித்துச் சகல கட்சிகளுடனும் சம்பந்தப்பட்ட இயக்கங்களுடனும் அரசியல் ரீதியாகப் பேசித்தான் தீர்வுகாணவேண்டும் என்றும் அத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

### மணிவாக்கு

முதுமையின் துன்பம், ஒருவர் வயோதிபராகிவிட்டாரே என்பதல்ல; அவருடைய உள்ளம் முதிர்ச்சி படையவில்லையென்பதே.

—ஒஸ்கார் வைல்டு

# நமது நோக்கு

## இவ்வாரத் தேர்தல் விளையாட்டு

சிக்கல் நிறைந்த இன்றைய உலகில், தேர்தல் உட்பட பல மனித ஸ்தாபனங்கள் முரண்பாடு நிறைந்து காணப்படுகின்றன. ஜனநாயக ஆட்சி உலகில் பலவிதம், எங்கள் நாட்டில் அது இன்று ஒருவிதம்; நடக்க வேண்டிய பொதுத்தேர்தல் ஆறு வருடங்களுக்குப் பின்போடப்பட்டிருக்கிறது; ஒரு சிறு தேர்தல் அதன் இடத்தை எடுத்திருக்கிறது.

இந்த நூதன நிலை அரசியல் அமைப்பில் முன்கூட்டியே ஏற்பாடாகியுள்ளது; அதற்குப் பெயர் "மக்கள் தீர்ப்பு" பார்வையில் அது பிரமாதமாகத் தோன்றும். இந்த நாட்டு மக்கள் ஒரே குரலில் எங்களுக்கு இந்தக் 'கோசு' பொதுத்தேர்தல் வேண்டாமென்றுவாக்களிப்பது! பெரும்பான்மை வாக்கென்பது தெரிந்ததே.

நடைமுறையில் அது எவ்வாறு செயற்பட்டதென்பதை விளக்க வேண்டிய அவசியமில்லை; சாதாரண வாக்காளருக்கு விளக்க வேண்டிய அவசியம் உண்டா? "ஆறு வருடம் ஓடிய பைசிக்கிளைப் பழுது பார்ப்பதா அல்லது அதனை விற்று வேறொன்றைப் புதிதாக வேண்டுவதா?

பைசிக்கிள் மட்டுமல்ல, கார் போன்ற வாகனங்களும், பெண்களின் ஆடை அலங்காரம் ஆண்களின் அவசியபாவனைப் பொருட்கள் எல்லாம் இக்காலத்தில் பழுது பார்த்தலுக்குப் பொறுத்து நிற்கா. காலம் வந்ததும் களையப்பட்டு புத்தம் புதிய பொருட்களே அவற்றின் இடத்தை எடுக்கும்.

ஆனால் இலங்கையில் பழைய பாராளுமன்றம் அவ்வாறே தொடருமென்ற தீர்ப்பு மக்களின் தீர்ப்பு! அதற்கொரு திருத்தம், பழைய பாராளுமன்றத்தில் உறுப்புகள் எங்கு தலித்திருக்கின்றனவோ அவற்றைப் பழுதுபார்க்கும் வாய்ப்புக் கிட்டியிருக்கிறது.

எனவே 18ம் தேதி 18 பாராளுமன்ற அங்கத்தினர் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர்; குட்டிப்பொதுத் தேர்தல் இது என்று நினைக்கவிழையும் மக்களுக்கு, விடிவு கிடைக்குமா?

விடிவென்றால் என்ன அர்த்தம்? பொதுத்தேர்தலை ஒழித்து இன்னும் ஆறு வருடம் ஆட்சியைத் தொடரவிருக்கும் அரசு, போதிய எதிர்ப்பில்லாத காரணத்தால் எதேச்சாதிகாரமாக ஆட்சி செய்வது இயல்பு. இத்தேர்தலில் மக்கள் அரசை எதிர்த்து வாக்களிப்பார்களா? ஜனநாயகம் புத்துயிர் பெறுமா?

எதிர்க்கட்சிகள் ஒற்றுமைப்படாத நிலையில் தான் பொதுத்தேர்தலைக் கோருகின்றோம் என்பது, ஜனாதிபதி கூறியதுபோல் வெறும் 'நான்சென்ஸ்'!

18 ஆசனங்களும் எதிர்க்கட்சி கைப்பற்றினாலும் ஆளும் கட்சியை அசைக்க முடியாது. எதிர்க் கட்சித் தலைவரின் தமிழர் விடுதலைக் கூட்டணி பறந்தொளிந்து தங்கள் ஆசனங்களை வேளைக்குக் காலியாக்கினால் தேர்தலில் எதிர்க்கட்சிப் பலம் அதிகரிக்க இடமுண்டு.

அரசைப் பொதுத்தேர்தல் நடத்த நிர்ப்பந்திக்கும் அரசியல் அடிப்படை எதுவும் நாட்டிற்கு நல்லது. ஏன்? நினைத்தபடியெல்லாம் அரசியலமைப்பை மாற்றி அடிப்படை உரிமைகளை உதறித்தள்ள உதவும் சட்டங்கள் இயற்றும் அதிகாரம், அதற்குரிய அங்கீகாரம் யாவும் ஜனநாயக ஆட்சிக்கு முழு மாறான நிலை.

நாட்டின் அபிவிருத்தி எந்த உச்சகட்டத்தை அடைந்தபோதும் பட்ஜட் துண்டுவிழுந்தொகை வளர்பிறைபோல் பெருத்து வருகிறது. இன்றைய அரசியல் தன்மை, தன்முறை தனிமுறையாகத் தொடர்வதற்கு கொழும்புப் பத்திரிகைகள், அரசு பொதுஜனத் தொடர்பு ஸ்தாபனங்கள் தினசரி பிரசாரம் செய்கின்றன. அது இலகுவில் நடக்குமென்று நாம் நம்பவில்லை.

ஆட்சியின் உண்மை நிலையைப் பொதுமக்கள் அறிவதற்கு பாராளுமன்றம் இன்று உதவுவதில்லை. எதிர்க்கட்சி வலிமையிழந்து மண்கவ்வியது. இன்றைய ஆட்சியின் பலமும் பலவீனமும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியிலேயே தங்கியிருக்கிறது. எடுத்ததற்கெல்லாம் ஜனாதிபதியவர்களே நேரடிப் பொறுப்பாளராகிவிடுவது வழக்கமாகிவிட்டது.

பேராதனையில் தமிழ்-சிங்கள மாணவர் கலாட்டா தொடக்கம் வடபகுதியைப் பீடித்திருக்கும் "பைத்திய பயங்கரவாதம்" வரைக்கும் உள்ள குழப்பங்களை ஒழித்துக்கட்டும் பொறுப்பும் ஜனாதிபதியினுடையதேஎன்றால் ஜனநாயக ஆட்சியின் பல சில்லுகள் யாவும் பழுதடைந்து விட்டனவா? என்பதே சரியான கேள்வி.

ஐம்பது உள்ளூராட்சிமன்றங்களும் அரசியல் கட்சிகளின் பலத்தைப் பரீட்சிக்கும் வகையில் இவ்வாரத்தில் தங்கள் முடிவுகளை எடுக்க இருக்கின்றன.

நாட்டின் ஆட்சி அரசியல் கட்சிப் பலத்தை அடிப்படையாகக் கொண்டதால் அந்தக் கோட்பாடு உள்ளூராட்சியிலும் வேரோட வேண்டுமென்பதே இன்றைய அரசியல் சித்தாந்தம்.

கிராமத்திலும், பட்டினத்திலும், நகரத்திலும் அரசியல் போட்டி என்ன ரூபம் எடுக்கிறதென்பது ஒரு விபரீதக் கதை; ஒவ்வொன்றும் போர்க்களமாகி வருகிறது. வடபகுதி ஏளனத்திற்கு உரித்தாகிவிட்டது. இதிலும் "வடக்கைப் போல் அழிந்துசெயற்படாதீர்" என்ற எச்சரிக்கை அரசை ஆதரிக்கும் பத்திரிகைகளின் அச்சுச் செய்தியாகும்.

எது எவ்வாறாயினும் ஆற்றில் கிடந்த முதலை கண்டஞ்சிப்போய் ஈற்றில் கரடியை எதிர்ப்பட்டவரலாறு போல் முடியாதிருந்தால் போதும்.

---

தமிழ் தீவிரவாதிகள்

# சிங்கள மக்களுக்கு எதிரானவர்களல்ல; யூ. என். பி. அரசுக்கே எதிரானவர்கள்"

## வடபகுதி நிலைமை பற்றி 'வாசுதேவா'

(யாழ்ப்பாணம்)

"தமிழ்த் தீவிரவாதிகள் தமிழ் மக்களை நசுக்கும், இந்த யூ. என். பி. அரசாங்கத்தைக் கடுமையாக எதிர்க்கிறார்களே தவிர அவர்கள் சிங்கள மக்களுக்கு எதிரானவர்களல்லர்."

நவ லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் திரு வாசுதேவ நாணயக்கார வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

"பயங்கரவாதத் தடைச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அன்று முதல் நவசமசமாஜக் கட்சி இச்சட்டத்திற்கெதிராக தீவிரமாகப் போராடி வந்துள்ளது. இச்சட்டத்தின் மூலம் முதலாளித்துவ ஜனநாயகமே படுகொலை செய்யப்பட்டுவிட்டதென்பதைக் குறிக்குமுகமாக கொழும்பில் எமது கட்சியினரால் ஒரு சவப்பெட்டி ஊர்வலம் நடாத்தப்பட்டது. இச்சட்டத்தின் கீழ், தமிழ் இளைஞர்கள், மத குருமார்கள், டாக்டர்கள், விரிவுரையாளர்கள் போன்ற பலர் இராணுவ முகாம்களில் காலவரையறையின்றித் தடுத்து வைக்கப்பட்டு, ஈவிரக்கமின்றிச் சித்திரவதை செய்யப்பட்டுவருகின்றார்கள். வண. பிதா சிங்கராயர், காந்தீயத்தைச்சேர்ந்த திரு ஏ. டேவிட் ஆகியோர் உட்பட சிலர் நிர்வாணமாக்கப்பட்டும் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார்கள்.

'சென்ற மாதம் திருகோணமலையைச் சேர்ந்த 28 வயது இளைஞராகிய நவரத்தினராசா 35 காயங்களுடன் குருநகர் இராணுவ முகாமில் இறந்து கிடந்தார். இச்சம்பவம் பற்றி இத்தார்மீக அரசாங்கம் கவலையாவது தெரிவிக்கவில்லை.

"யூ. என். பி. அரசாங்கத்தின் இத்தகைய கொடுமையான அட்டூழியங்களை எதிர்த்து தீவிரவாத தமிழ் இளைஞர்கள் பல்வேறு செயல்களில் ஈடுபட்டுவருகின்றனர். அண்மையில் 3 யூ என் பி. ஆதரவாளர்கள் யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இவர்களில் இருவர் பருத்தித்துறை, சாவகச்சேரி நகரசபைத் தேர்தலில் முதலாவது அபேட்சகர்களாக நிறுத்தப்பட்டிருந்தனர். இதன் பின் வடக்கில் உள்ள போராட்டங்களை நசுக்குவதற்கு கூடுதலான இராணுவத்தினரை அங்கே அனுப்புவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது.

"அரசியலமைப்பின் போர்வையில் போனபாட் சர்வாதிகாரியாக இயங்கிவந்த ஜே ஆர். இராணுவச் சர்வாதிகாரியாக மாறுகின்றார்.

"இந்த அரசாங்கம் பெரும்பகுதியான ஏழைச் சிங்கள மக்களையும் அடக்கி ஒடுக்குகின்றது. தமிழ்ப்போராளிகள் நீதிமன்றக் குற்றவாளிக் கூண்டில் நின்று கொண்டே இந்த அரசாங்கத்தால் அடக்கி ஒடுக்கப்படும் ஏழைச் சிங்கள மக்களின் விடுதலைக்காகவும் தாம் போராடத்தயாரென்று கூறியுள்ளார்கள்.

"கடந்த 8 மாத காலத்தில் 3-வது தடவையாக வடபகுதி நிலைமையை அறிவதற்கு நான் 7-5-88-ல் யாழ் சென்றேன். இம்முறை எமது பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னவும் என்னுடன் வந்திருந்தார். இராணுவம் அங்கே குவிக்கப்பட்டுள்ள நிலையில் பொதுமக்கள் மத்தியில் பயமும் பீதியும் நிலவுகிறது.

"தமிழ் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் தனிநபர் பயங்கரவாதச் செயல்களை எமது கட்சி ஏற்றுக்கொள்ளாது ஆனால் துரதிஷ்டவசமாக இது தான் அங்கு நிலவும் உண்மையான

[5-ம் பக்கம் பார்க்க]

---

"தேர்தல் தினத்தன்று

# தமிழ் மக்கள் அமைதியாக இல்லங்களில் இருக்கவேண்டும்"

## காங்கிரஸ் பொதுச்செயலாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா ஆட்சியாளர்களின் அதிகாரம் தமிழ் ஈழத்தில் செல்லுபடியாகாமல் அரசாங்க நிர்வாகம் இயங்கவிடாமல் தடுக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாகப் போராட்டகளமாக அமையப்போவதே இம்மாதம் 18ம் தேதி தமிழ் ஈழத்தில் நடாத்தப்படவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலாகும். அன்று தமிழ் மக்கள் அமைதியாக தங்கள் இல்லங்களில் இருக்க வேண்டும்"

தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு.குமார்பொன்னம்பலம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறுவேண்டுகோள் விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

'வேட்பாளராகப் போட்டியிட முன் வந்தவர்கள் போட்டியில் இருந்து விலகியபின் வேட்பாளர் பட்டியல் வெறும் காகிதம் ஆகும், வெறும் பட்டியலுக்கு வாக்குப்போட்டாலும்கூட தெரிவு செய்யப்படப் போபவர்கள் யார்? பதவி வகிக்கப் போபவர்கள் யார்? நிர்வாகத்தை நடத்தப் போகின்றவர்கள் யார்? எனவே வேட்பாளர்கள் விலகியபின் மக்களை வாக்களிக்கும்படி கேட்பது ஆட்சியாளர்களைத் திருப்திப்படுத்த முனையும் சிலரின் பொறுப்பற்ற செயலாகும்.

தமிழ்க் காங்கிரசைப் பொறுத்தவரை சர்வாதிகாரமான நிலைமையில்லை. தேர்தல்களில் வெற்றிபெறும் நிச்சயமான நிலைமை இருந்தும் கூட தமிழ்ஈழ போராளிகளின் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைக்கு, சுதந்திர போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக எமது வேட்பாளர்களின் பூரண சம்மதத்துடன் தான் தேர்தலில் இருந்து விலகுவது என்றும், வாக்களிப்பது இல்லை என்றும், பொறுப்புணர்வுடன் தமிழ்க்காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

"நகரம் எரிந்தாலும் மக்கள் செத்தாலும் கவலையில்லை. தேர்தலை நடத்தியே தீருவது, படைபலம் கொண்டாவது தேர்தலை நடத்துவதுமூலம், தமிழ் ஈழத்தில் அதிகாரத்தை நிலைநாட்டியே தீருவது என கங்கணம் கட்டி செயலாற்றி வருகின்றார்கள். சிங்கள ஆட்சியாளர்களை இவர்களது எண்ணத்தை நிறைவேற்றவே கூட்டணி இத்தேர்தலில் போட்டியிடுகின்றது.

"தமிழ் ஈழத்திலுள்ள

(8-ம் பக்கம் பார்க்க)

---

திருக்கேதீஸ்வரம் திருவிழா
இன்று ஆரம்பம்

### திருக்கேதீஸ்வரத்தானே போற்றி!

விண்ணவர்மா லயன்பணியும் விகிர்தா போற்றி
வேதநெறி யாயொளிரும் விளக்கே போற்றி
மண்ணவர்கா முறவருளும் மருந்தே போற்றி
மாதவர்க ளுடனிருக்கும் மணியே போற்றி
கண்ணவர்தா மூளத்துவக்குங் கனியே போற்றி
காணார்க்குங் கண்ணளிக்குங் கண்ணே போற்றி
திண்ணமர்ந்த திருவாய திகழ்வே போற்றி
திருக்கேதீஸ் வரத்தானே போற்றி போற்றி.

காண்டரிய பேரின்பக் கனியே போற்றி
கல்லாவின் புடையமர்ந்த கதியே போற்றி
தாண்டரிய வெய்யபிணி தகர்ப்பாய் போற்றி
தானுமாய் தத்துவத்தைத் தருவாய் போற்றி
தூண்டரிய தாமுணர்த்துச் சுடரே போற்றி
தூமறைகள் தாமுணராத் தூயா போற்றி
தீண்டரிய மெய்ஞ்ஞானத் தேவே போற்றி
திருக்கேதீஸ் வரத்தானே போற்றி போற்றி.

— ச. தங்கமாமயிலோன்.

### மலைமகளின் மணவாளா போற்றி!

கண்ணின் கருமணிநீ கருமணியின் நல்லொளிநீ!
எண்ணில் மன்னுயிர்க ளெல்லாம்நீ—விண்ணிலுறை
தேவாதி தேவர்க்கும் மாலயர்க்கும் எட்டாய் நீ!
தேவிஉமை மணவாளா போற்றி!

எண்ணும் எழுத்தும்நீ சொல்லும் பொருளும்நீ!
பண்ணும் இசையும் சுவையும்நீ—கண்ணுமேவாய்
அல்லும் பகலும்நீ புராவியும் மறுயும்நீ!
மலைமகளின் மணவாளா போற்றி!

வினையின் முதலும் நீ வினைவிளைக்கும் பயனும்நீ!
வினையை முடிக்கும் அன்பும்நீ—[illegible]கடலின்
தடங்கரையில் ஒளிர்கின்ற கேதீச்சரத் துள்ளாய்நீ!
விடமுண்ட கண்டனே போற்றி!

— "முருகு"

# "எங்கு பலமுண்டோ அங்கேபோராட வேண்டும்"

## கோவை மகேசன் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

"நமக்குஎங்கு பலமுண்டோ அந்த இடத்தில் போராட வேண்டும். அதன் வெற்றியும் விளைவும் தமிழீழம் முழுவதும் எதிரொலிக்கவே செய்யும்"

இவ்வாறு உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக தமிழீழ விடுதலை அணியின் செயலாளர் திரு. கோவை மகேசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

அறிக்கையின் விபரம் வருமாறு:

சிறீலங்காவின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட்டு தமிழீழத்தின் சுதந்திரத்தையும் இறைமையையும் மீட்டுக் கொள்வதற்காகப் போராடி வரும் தீவிர இலட்சியப் பிடிப்புள்ள இளைஞர்கள், சிறீலங்கா அரசு தனது ஆதிக்க மேலாண்மையை நிலைநாட்டித் தனது நிர்வாக இயந்திரத்தை செயற்படுத்தும் ஓர் அம்சமாகத் தமிழீழத்தில் நடத்தும் தேர்தல்களில் எவரும் பங்குபற்றக் கூடாதென்றும். தேர்தலை நிராகரித்துப் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் வலியுறுத்திவருகின்றனர். இக்கொள்கையின் அடிப்படையில் எதிர்வரும் 18 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத்தேர்தலை நிராகரிக்க வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

தமிழீழவிடுதலைக்காகத் தம் உயிரைப் பணயம் வைத்து தமது வாழ்வையே அர்ப்பணித்துப் போராடிவரும் வீரத் தமிழ் இளைஞர்களின் உருக்கமான வேண்டுகோளையடுத்து, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் தனது வேட்பாளர்களை முற்றாக விலக்கிக் கொண்டு விட்டது: ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர்கள் ஏராளமானோர் விலகிவிட்டனர்; கூட்டணிசார்பில் போட்டியிட்ட முக்கிய வேட்பாளர்களும், வல்வையில் அனைவரும் விலகிவிட்டனர் சுயேட்சைக் குழுவும் விலகிவிட்டது. இவ்வாறு தமிழினம் முழுவதும் ஒட்டுமொத்தமாகத் தேர்தலைப் பகிஷ்கரிப்பதில் ஒன்றுபட்டு நிற்கும்போது- விடுதலையை முன்னெடுக்கும் இந்தப் பகிஷ்கரிப்புக்கு மாறாக, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை பிடிவாதமாக இருப்பது வேதனைக்குரிய விஷயமாகும்:

தேர்தலில் போட்டியிடுவதற்கு கூட்டணி கூறும் நியாயம் வேடிக்கையானது. திருகோணமலை, வவுனியா போன்ற பகுதிகளைச் சிங்களவரிடம் கையளிப்பதா என்று கேட்கிறார் திரு. அ. அமிர்தலிங்கம், கடந்த 30 ஆண்டுகளாகத் தமிழ் காங்கிரஸ், தமிழரசுக்கட்சி என்றவையே திருகோணமலை, வவுனியா போன்ற பகுதிகளின் நாடாளுமன்றப் பதவியையும், உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்தையும் தமது கையில் வைத்திருந்தார்கள்: இன்று அபிவிருத்திச் சபைகளையும் வைத்திருக்கிறார்கள். இவற்றால் சிங்களக் குடியேற்றத்தைத் தடுக்க முயன்றதா? 'சேருவில' தொகுதி திருகோணமலையில் உருவாக்கப்படுவதை தடுக்க முயன்றதா? மாறாக இவர்களது ஆதரவுடன்தான் 'சேருவில' தொகுதி உருவாக்கப்பட்டது. வவுனியாவில் கொக்கச்சான் குளத்தில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டார்கள். எனவே நாடாளுமன்றத்திலும், உள்ளூராட்சி சபைகளிலும், அபிவிருத்திச்சபைகளிலும் இருப்பதால் தமிழ் மண்ணை சிங்கள ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாக்கலாம் என்று இனியும் கூறுவது மக்களை ஏமாற்றுவதற்கே தவிர வேறொன்றுமில்லை.

கூட்டணித் தலைமை கூறுவதை வாதத்துக்காகச் சரியென்று கொண்டாலும் இன்றுள்ள நிலையில் எமக்கு எங்கே பலமிருக்கிறதோ அங்கேதான் போராடமுடியும். யாழ். மாவட்டத்திலேதான் போராட்டத்தை முன்னெடுக்கக்கூடிய வாய்ப்பும் வசதியும் இன்று உண்டு 1961 ஆம் ஆண்டு தமிழீழம் முழுவதும் தழுவிய முறையில் இருமாத காலம் மறியற் போராட்டம் நடத்தியமை. இன்றைய நிலையில் தமிழீழம் முழுவதும் தழுவிய முறையில், அவ்வாறு ஒரு பெரிய சட்டமறுப்புப் போராட்டமோ, ஒரே சமயத்தில் முன்னெடுப்பதில் முட்டுக்கட்டைகள் பல இருக்கின்றன. அதற்காகப் போராடாமல் இருக்கவும் முடியாது. நமக்கு எங்குபலம் உண்டோ, அந்த இடத்தில் போராடவேண்டும். அப்போராட்டத்தின் வெற்றியும் விளைவும் தமிழீழம் முழுவதும் எதிரொலிக்கவே செய்யும்.

எனவே முதலில் தமிழ் மக்களே நூறு வீதம் வாழும் யாழ்ப்பாண மாவட்டத்தில் தேர்தல் பகிஷ்கரிப்பு என்ற ஒத்துழையாமை இயக்கத்தை வெற்றிகரமாக நடத்துவோம். எனவே கூட்டணித்தலைமை உள்ளூராட்சித் தேர்தலை நிராகரித்துப் பகிஷ்கரிப்பதன் மூலம், சாத்வீக ஒத்துழையாமை இயக்கத்தை முன்னெடுக்கவரவேண்டும், தமிழ் மக்களின் ஒன்றுபட்ட சக்தியோடு கூட்டணியும் இணைய வேண்டும். விடுதலைப்போராட்டத்துக்கான முதலாவது நடவடிக்கைக்கு குறுக்கே நிற்கவேண்டாம் என்று கூட்டணித் தலைமைக்குப் பணிவான வேண்டுகோள் விடுக்கிறோம்.

## சுன்னாகத்தில் பெந்தகொஸ்து செப விழா

(அரியாலை)

சுன்னாகம் கிறிஸ்து சேவா ஆச்சிரமத்தில் இம் மாதம் 19-ம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் மூன்று நாட்களுக்குப் பெந்தெகொஸ்து செப விழா நடைபெறவிருக்கிறது.

தினமும் காலை 6 மணிக்கு பரிசுத்த நற்கருணை ஆராதனையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் வேதவகுப்பு, செபகுழுக்கள் பரித்து வேண்டல், வாலிபர் கூட்டம், நற்செய்திக் கூட்டம் முதலான நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளை ஆச்சிரமத் தலைவர் சேவகருட்திரு. சாம். அப்பிரட் அடிகளார் செய்துள்ளார்.

(அ)

## நகைத் திருட்டு வழக்கில் எதிரி விடுதலை

(மாவிட்டபுரம்)

10 ஆயிரம் ரூபா பெறுமதியான நகை, பணம் ஆகியவற்றை கையாடியது தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் சாட்சிய முரண்பாட்டால் எதிரி விடுதலைசெய்யப்பட்டார்.

தொல்புரத்தைச் சேர்ந்த சிதம்பரக் குருக்கள் முத்துக்குமாரசாமிக் குருக்கள் என்பவரது வீட்டில் தங்கியிருந்துவிட்டு அங்கிருந்த இரும்புப் பெட்டியை உடைத்து சங்கிலி, மோதிரம், 2000 ரூபா பணம் ஆகியவற்றை கையாடியதாக குற்றம்சாட்டி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ். றபீக் என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்டது.

வழக்காளியும் அவரது மனைவி இராமலட்சுமியும் சாட்சியமளித்தனர். எதிரி சார்பில் ஆஜரான சட்டத்

(8ம் பக்கம் பார்க்க)

## ரூப வாஹினியில் இன்று

மாலை 6-00 நிகழ்ச்சி முன்னோட்டம்
6-01 சிறுவர் நிகழ்ச்சி [சிங்களம்]
6-30 'பிப்புளுமாபில்' இருவர்நிகழ்ச்சி[ஆங்கிலம்]
7-00 செய்தி மஞ்சரி [தமிழ்]
7-15 'டகிரஙி' ஆபிரிக்கக் காட்டு வைத்தியசாலை யொன்றைமையமாகக் கொண்ட சித்திரம்.
8-15 செய்தி மஞ்சரி (சிங்களம்)
8-30 ஆங்கில நகைச்சுவைச்சித்திரம்.
9-00 சிங்கள நிகழ்ச்சி.
9-30 செய்தி மஞ்சரி (ஆங்கிலம்)
9-45 துப்பறியும் தொடர் சித்திரம் (ஆங்கிலம்)
10-45 ஒளிபரப்பு முடிவு.

## "கூட்டணி முடிவுக்கு மாறாக வேட்பாளர் வாபஸ் பெறுவதற்கு வட்டு. கூட்டணி கிளை கண்டனம்!"

(யாழ்ப்பாணம்)

'தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைப்பீடத்தின் அனுமதியின்றி இயக்கத்தின் முடிவுக்குமாறாக உள்ளூராட்சி மன்ற தேர்தல் வேட்பாளர் பட்டியலில் இருந்து வாபஸ் பெறுவதை இச்சபை வன்மையாக கண்டிக்கிறது''

வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளை மேற்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது.

கீழ்க்காணும் தீர்மானங்களும் கூட்டணி வட்டுக்கோட்டை கிளைக்காரியாலயத்தில் நடந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தமிழ் இனத்தின் தலைவர் அ. அமிர்தலிங்கம் கலந்துகொண்ட யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தை குழப்பியதையும் அவரின் வாகனத்தைக் கடத்தி சேதப்படுத்தியன் மூலம் அவருக்கும் தமிழ் இனத்திற்கும் அவமானத்தை ஏற்படுத்தியமைக்கும் வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிக்கிளை வன்மையாகக் கண்டிக்கிறது.

மேற்படி கூட்டம் குழப்பப்பட்ட நிலையிலும் மேடையை விட்டு இறங்காது தற்துணிவுடனும் வீரத்துடனும் தன் உயிரையும் பொருட்படுத்தாது மீண்டும் தொடர்ந்து கூட்டத்தை நடத்தி முடித்த எமது இயக்கத்தினதும் இனத்தினதும் தன்மானத்தைக் காப்பாற்றியமைக்கு எமது வட்டுக்கோட்டைத் தொகுதிக் கிளை பாராட்டுதலைத் தெரிவிக்கின்றது. (க)

## சிங்கள மக்களுக்கு...

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

நிலைமையாகும் இந்த நிலைக்கு யூ. என். பி. அரசாங்கத்தின் கொடூரமான இராணுவ அடக்குமுறையே காரணமாகும்.

'தமிழ் கூட்டணி யூ. என். பி அரசாங்கத்தை எதிர்த்து எத்தகைய உறுதியான போராட்டத்தையும் நடத்த தயாராயில்லை 1981-ல் தமிழ் கூட்டணியினர் தாம் முன்வைத்த 5 கோரிக்கைகளையும் காற்றில் பறக்கவிட்டு பாராளுமன்ற பகிஷ்கரிப்பையும் கைவிட்டனர். இதன் மூலம் தமிழ் மக்களை இவர்கள் மீண்டும் காட்டிக் கொடுத்து விட்டார்கள்.

எனவே தமிழ் மக்கள் நசுக்கப்பட்டுவரும் ஏழைச் சிங்கள மக்களுடனும் தொழிலாளி வர்க்கத்துடனும் ஒன்றிணைந்து போராடுவதன் மூலமே பொது எதிரியாகிய யூ. என். பி அரசாங்கத்தை விரட்டியடிக்கமுடியும். அதே மாதிரி இந்நாட்டில் ஒரு சோஷலிஸ அரசாங்கத்தை அமைப்பதற்குத் தொடர்ந்தும் போராட வேண்டும்." (க)

## ச. ச. நிலைய ஆண்டுவிழாப் போட்டிகள்

(கரவெட்டி)

கரவை இளைஞர் சனசமூக நிலைய முதலாவது ஆண்டு நிறைவை யொட்டி இலக்கிய விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.


**புதுமனைக்கும் புதுமைவிரும்பிகளுக்கும் ஏற்ற**

**மரத்தளபாடங்களுக்கு**

**டில்கா பேணிச்சர் பலெஸ்**

234 - 236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 24186



**வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்**

நவீன சந்தைக்கடைகளில்

**வியாபாரம் செய்யும் உரிமை வழங்கல்**

நவீன சந்தைக் கடைகளில் வியாபாரஞ் செய்யும் உரிமை ஏலம் 25-5-83 முற்பகல் 10-00 மணியளவில் நடைபெறும். கடை பெற விரும்புவோர் 24-5-83 3 மணிக்கு முன் வைப்புப் பணம் ரூபா 500/- செலுத்தினால் மட்டும் கேள்வி கேட்க அனுமதிக்கப்படுவர். ஆனால் ஒரு முறை ரூபா 500/- செலுத்தியவர் ஓர் கடைக்கு சித்தியடைந்தால் மறுகடைக்குக் கேள்வி கேட்பின் பிறிதோர் 500/- ரூபா செலுத்தியிருக்க வேண்டும்.

**ஆரம்பக் கேள்வி**

கிழக்குப் புறக்கடைக்கு குறைந்த தொகை—25,000/-
தெற்குப்புறக் கடைக்கு குறைந்த தொகை—20,000/-
உட்புறக் கடைக்கு குறைந்த தொகை —15,000/-


கூடிய கேள்விக்காரர்களுக்குக் கடை வழங்கப்படும்.

ஏலத்திற்குரிய கடைகள்:- 7, 8, 9, 10, 11, 17, 18, 19, 21, 22, 24, 25, 26, 27

மேலதிக விபரங்கள் நிபந்தனைகள் சபை அலுவலகத்தில் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

ச. ஞானமூர்த்தி,
தலைவர்,
நகராட்சிமன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை.
12-05-1983 (7236)



பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் நடைபெற்ற லயன்ஸ் 306பி மாவட்டத்தின் வருடாந்த மகாநாட்டில் வட்டு. லயன்ஸ் கழகத்தலைவர் லயன். இ. விஜயரத்தினம், மாவட்ட ஆளுநர் லயன் டாக்டர் அரியம் நல்லையாவிடமிருந்து சர்வதேச தொடர்புகளுக்கான விருதைப் பெறுவதை படத்தில் காண்க.

மாணிக்கம் தாசன், றெபேர்ட் ராஜேந்திரத்தை

## சட்டவைத்திய அதிகாரி பரிசோதிக்கவேண்டும்

### நீதவான் உத்தரவு

(கொழும்பு)

"நாச்சிமார் கோவிலடி பொலிசார் கொலைவழக்கில் எதிரிகளான மாணிக்கம் தாசன் றெபேட் ராஜேந்திரம் ஆகியோரை எதிர்தரப்பு அரசு தரப்பு சட்டத்தரணிகள் முன்னிலையில் சட்டவைத்திய அதிகாரி பரிசோதிக்கவேண்டும்". கொழும்பு மேல்நீதிமன்ற நீதவான் திரு. ரூபர்ட் சில்வா மேற்கண்டவாறு நேற்றுமுன் தினம் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது உத்தரவிட்டார்.

பரிசோதனையை எப்படி நடத்துவது என்று நீதிமன்றத்திற்கு அறிவிக்கவேண்டுமென்றும் பரிசோதனை செய்தபின் அறிக்கையை உடன் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென்றும் நீதவான் உத்தரவிட்டார்.

எதிரிகள் இராணுவமுகாமில் தாக்கப்பட்டதாக கடந்த மாதம் சத்தியக்கடதாசியொன்று தாக்கல் செய்யப்பட்டது. இதன் பிரதியை பெற்றபிரதிவாதிகள் இராணுவமுகாமில் மீண்டும் 8ம் தேதி எதிரிகளை தாக்கியதாக நீதவானின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி எஸ். உருத்திரமூர்த்தியும் அரசதரப்பில் சட்டத்தரணி காந்திலால் குமாரசிறியும் ஆஜராகினர். (க)

## விலகும்படி வற்புறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்கள் சிலரை போட்டியிலிருந்து விலகும் படி தீவிரவாத இளைஞர்கள் வலியுறுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கட்சியின் வேட்பாளர் ஒருவரின் வீட்டுக்குச்சென்ற இளைஞர்கோஷ்டி அந்தவீட்டில் குறிப்பிட்ட வேட்பாளர் இல்லாமலிருந்ததைத் தொடர்ந்து வீட்டிலிருந்த பெண்ணை விசாரித்தனராம். பின்னர் அந்த வீட்டில் முன் ஹாலில் வைக்கப்பட்டிருந்த ஜனாதிபதியின் உருவப்படத்தை எடுத்துச்சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## கர்ப்பிணிப் பெண்மீது பலாத்கார முயற்சி; 3 சந்தேகநபர்கள் கைது!

### பணம், நகைகளும் கொள்ளை

(கிளிநொச்சி)

துப்பாக்கி முனையில் 6பேர் கொண்ட இளைஞர் கோஷ்டி பணத்தையும், நகைகளையும் கொள்ளையடித்துள்ளதுடன் 6 பிள்ளைகளுக்கு தாயான கர்ப்பவதிப் பெண்ணை பலாத்காரம் செய்ய முற்பட்டதைத் தொடர்ந்து அப்பெண்ணுக்கு கருச்சிதைவு ஏற்பட்டது.

நெஞ்சை உருக்கும் இச்சம்பவம் கிளிநொச்சி பொலிஸ் பகுதியை சேர்ந்த ஜெயந்தி நகரில் நடந்துள்ளது.

கிளிநொச்சி உதவிபொலிஸ் இன்ஸ்பெக்டர் ஈ. டபிள்யூ எக்கநாயக்கா, சார்ஜன் பொன்னம்பலம் ஆகியோர் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி இச்சம்பவம் தொடர்பாக மூன்று சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளனர், மற்றும் மூன்று சந்தேக நபர்களை தேடிபொலிசார் வலைவிரித்துள்ளனர்.

சம்பவதினம் இரவு ஜெயந்தி நகரில் உள்ள தமது வீட்டில் சண்முகம் சுப்பிரமணியம் என்பவரது மனைவி செல்வநாயகியும் அவரது ஆறுபிள்ளைகளும் நித்திரையில் இருந்த போது துப்பாக்கி, றிவோல்வர், கத்தி போன்ற பயங்கர ஆயுதங்கள் சகிதம் வீட்டில்புகுந்த ஆறு வாலிபர்கள் செல்வநாயகியையும் அவரது பிள்ளைகளையும் ஆயுத முனையில் பணயம் வைத்து பணம், நகைகளுக்குப் பெட்டியின்திறப்பை பெற்று பணம், நகை, கைக் கடிகாரம் ஆகிய 7ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை கொள்ளையடித்ததாகவும் கர்ப்பவதியான செல்வநாயகி மீது பலாத்காரம் பிரயோகித்து தகாதமுறையில் நடக்கமுற்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதனால் செல்வநாயகிக்கு கருச்சிதைவு ஏற்பட்டதாகவும் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக சந்தேகத்தின் பேரில் சுப்பிரமணியம் மகேந்திரம் (26-வயது) சுந்தரம்பிள்ளை குலேந்திரன் (35-வயது) செல்லையா பழனி 20-வயது ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் மூவரை பொலிசார் தேடிவருகின்றனர்.

## முல்லை.உதவி அரச அதிபர் இடமாற்றம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு உதவிஅரசாங்க அதிபர் திரு டி. சிங்காரவேலு யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யப்படவிருந்ததுபின் போடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவில் இம்மாதம் 27 28, 29ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் பிராந்திய தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுவேலைகளை திரு சிங்காரவேலு கவனித்து வருவதால் அவரது இடமாற்றத்தை பின்போடுமாறு யாழ், பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சு வித்தியானந்தன் ஜனாதிபதியிடம் கோரியிருந்தார்.

இதைத்தொடர்ந்து இடமாற்றத்தை பின்போடுமாறு ஜனாதிபதி பணித்துள்ளார்.

இடமாற்றத்தை ரத்துச்செய்யக் கோரிக்கை

இது இவ்வாறிருக்க முல்லைத்தீவு றெட்பானா குடியேற்றத் திட்டக்கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் திரு கே. தியாகராசா, துணைச்செயலாளர் திரு எல். வி பசுபதி ஆகியோரும் சங்கத்தின் சார்பில் உதவி அரசாங்க அதிபர் திரு சிங்காரவேலுவின் இடமாற்றத்தை ரத்துச்செய்யுமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சரை கோரியிருக்கின்றனர்.

திரு. சிங்காரவேலு நேர்மையுள்ள நம்பிக்கைக்குப்பாத்திரமான அதிகாரியென்றும் இவர் இன்னும் சிறிதுநாட்கள் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்தால் அம்மாவட்டம் சிறந்த முறையில் அபிவிருத்தியடையுமென்றும் அவர்கள் தமது கோரிக்கையில் தெரிவித்துள்ளனர். (கி)

## ஐ. தே. க. மேலும் ஒருவர் வாபஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர தேர்தலில் ஐ. தே. கட்சி வேட்பாளர் பட்டியலில் 28-ம் இடத்தில் இடம்பெற்றுள்ள கொழும்புத்துறையைச் சேர்ந்த திரு புலேந்திரன் விக்டர் ஜெயரத்தினமும் போட்டியினின்றும் வாபஸ் பெற்றுக்கொள்வதாக அறிவித்துள்ளார். தமது ராஜினாமாக் கடிதத்தைத் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பியுள்ளார்.

## சி. வை. தா. முத்திரைவெளியீடு சிறுப்பிட்டியில் நடத்தகோரிக்கை

(அச்சுவேலி)

தமிழ்வளர்த்த திரு. சி. வை. தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்த முத்திரை வெளியிடும் வைபவம் ஒன்றினை அவர் பிறந்த மண்ணான சிறுப்பிட்டி கிராமோதய சபைப்பகுதிக்குள் நடாத்தவேண்டும். அத்துடன் அதனை சிறுப்பிட்டி கிராமோதய சபை பொறுப்பேற்று நடாத்தவேண்டும்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் திரு. க. லோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற பிரதேச சபைக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

இம்மாதம் 22ம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இம் முத்திரை வெளியீட்டு விழா நடைபெறவிருக்கிறது. (அ)


விற்பனைக்கு

| | |
|---|---|
| 24 சிறி 6763 | இசுசு லொறி |
| 24 சிறி 4222 | இசுசு லொறி |
| 29 சிறி 4807 | கோஸ்டர் |
| 29 சிறி 5759 | இசுசு எல்ப் |
| 35 சிறி 927 | ரோயாட்டா கை ஏஸ் |
| 27 சிறி 627 | எல்டி 2 வான் (உதிரிப்பாகத்திற்கு) |

பினன்ஸ் வசதிகளுக்கும் மற்றும் விபரங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டியது.

சட்ட அதிகாரி,
த பினன்ஸ் கொம்பனி லிமிட்டெட்,
249, C மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 23680

எலெக்ரோனிக் யுகத்தில்
நியுவிக்ரேஸ் எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

- சகல மின்னியல் பொருட்கள்
- வீடியோ படப்பிடிப்பு றெக்கோடிங்
- ரி. வி. கேம் திடல்
- பாடல்கள் றெக்கோடிங்
- எலெக்ரோனிக் நிபுணத்துவ ஆய்வுகூடம்

தேவைகளை நிறைவு செய்ய
குறைந்த செலவில் சகல வசதிகளுடன் கூடிய
குளிரூட்டப்பட்ட ஸ்தாபனம்

வாரீர்! வருகை தாரீர்!! தேவைகளை நிறைவு செய்வீர்!!!

NEW VICTORS
ELECTRONIC COMPLEX
(AUDIO - VIEDIO SPECIALISTS)
23, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23532

**ராஜா** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - சாவித்திரி
**வேட்டைக்காரன்**

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி- 4-10 7-00
சனி. ஞாயிறு 1-30
**லவகுசா**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எஸ் எஸ் ஆர்-விஜயகுமாரி
**சாரதா**
இதுவே யாழ்நகரில்
கடைசித்தடவை

**றீகல்** 5-வது வாரம்
(யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
சிவாஜி, பிரபு,
சுந்தரராஜன், ஸ்ரீப்பிரியா
**சங்கிலி**
சிலதினங்கள் மட்டும் (ஈஸ்ட்மன் கலர்)

**ராணி** தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
கமலஹாசன்
ரதி
**உல்லாசப்பறவைகள்**
வெகு விரைவில் சகலகலா வல்லவன்

**வெலிங்டன்**
(யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
16 – 18 வரை
சுந்தரராஜன் – வசந்தா
வி. கே. ராமசாமி
**ஆலயம்**

**லிடோ** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
**மன்னவன்**
**வந்தானடி**

**ஸ்ரீதர்**
(யாழ். நகர்)
தினசரி 10.30, 2.00, 4.30,
7,00 9 30
Walt Disney's
**HERBIE GOES BANANAS**
(Family Entertainment)

**வின்ஸர்** தினசரி இன்னும் சில தினங்கள் மட்டும்
(யாழ். நகர்) 10-30, 2-30, 6-30, 9-30
சிவகுமார்-சரிதா- சில்க் சுமிதா-சுருளிராஜன்
**வண்டிச்சக்கரம்**
(வண்ணக் கலர்)
18-5-83 முதல் SO FINE

**மனோகரா** தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
கமலஹாசன், ஜெய்சங்கர், ஸ்ரீதேவி
**வாழ்வே மாயம்** (ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி** — (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
ஹவுஸ் புல்! ஹவுஸ்புல்!
சிவாஜி ... லட்சுமி . நாகேஷ் மனோரமா
பாலாஜியின்
**தியாகம்**
(ஈஸ்ட்மென் கலர்)


## இன்று ஆரம்பமாகும் மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வேலணை மேற்கு பெரிய புலம் மகாகணபதிப்பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் இன்று கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 நாட்கள் திருவிழா நடைபெறவுள்ளது. 25-ம் திகதி தேர்த்திருவிழாவும் 26ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். திருவிழாக் காலங்களில் சிறப்பு நிகழ்ச்சியாக தினமும் இரவு கம்பராமாயண விரிவுரை, அகில இலங்கை கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் அவர்கள் நடாத்துவார். (சூ)

## காங்கேசன்சிமெந்துதொழிற்சாலையில் வேலைஇழந்த ஒருபகுதியினர் மீண்டும் வேலை பெற்றனர்

மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சீமெந்து ஆலை 3ம் கட்டப்பிரிவில் வேலை நீக்கம்செய்யப்பட்ட தொழிலாளர்களில் ஒரு பகுதியினருக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி 3ம் கட்டப் பிரிவில் வேலைசெய்து வேலைவங்கி மூலமாக நியமனம்பெற்ற தொழிலாளர்களுமாக சுமார் 1000 பேர் வரையில் திடீர் வேலைநீக்கம்செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவர்களின் வேலைஒழுங்கை ஆராய்ந்து மீண்டும் நியமனம் வழங்க 3ம் கட்டப் பிரிவினர் நடவடிக்கை எடுத்திருந்தனர். இப்படி வேலைநீக்கஞ்செய்யப்பட்டவர்களில் ஒருபகுதியினர் மீண்டும் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## இன்றைய பலன்

வைகாசி 2-ம் திகதி
திங்கட்கிழமை
(16-5-83)

மேடம்: நிதியில் நல்ல அபிவிருத்தி காணப்படும் நீண்டநாள் கடன் தொல்லை இன்று நிவர்த்தியாகும். கணவன் மனைவி உறவுமுறைகள் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும் இனபந்துக்களின் ஆதரவு கிடைக்கும்.

இடபம்: ஏமாற்றத்தின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள் குடும்பத்தில் சிறிய பூசல்கள் தலைதூக்கும் தனிவழிப் பயணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும் இன்று சகோதரத்தின் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

மிதுனம்: எவ்விடயத்திலும் நன்றாக ஆலோசித்த பின்பே முடிவெடுக்கவும் முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் நடக்கவும் குறுக்கு வழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக் கொள்வீர்.

கடகம்: பேச்சுவன்மையால் பெரும்புகழ் கிடைக்கும் பெரிய இடத்துச் சகவாசம் உங்களுக்குச் செல்வாக்கைத் தேடித்தரும் எதிர்பாராத காரியம் ஒன்று மேற்கொள்ளப்படலாம் வரவில் உயர்வுண்டு.

சிங்கம்: வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம் வேண்டாத உறவுகளை துண்டித்தலால் சகோதரவழியால் பிரச்சனை உருவாகும் சிந்தனை அலைகள் சீறிப்பாயும் எதற்கெடுத்தாலும் ஆத்திரப்படுவீர்கள்.

கன்னி: தகுதியில் முன்னேற்றமுண்டு தரமான வாழ்வும் கிட்டும் எதிரிகள் பணிவார்கள் எதிலும் வெற்றி உண்டு. வாகனச் சொந்தக்காரர்களுக்கு நல்லதினம் பொறியியல் ஆளர்களுக்கு வேண்டியபணம் கிடைக்கலாம்.

துலாம்: வாழ்க்கை இன்று அமைதியாகச் செல்லும் மனம் போல் யாவும் நடக்கும் உறவினர்கள் ஆதரவு தாராளமாகக்கிடைக்கும் புரட்சிகரமான மாறுதல்களை விரும்புவீர்கள்.

விருச்சிகம்: தூரதேசம் உங்களை தயரத்தால் ஆழ்த்தும் எதிர்பாராத விபத்திற்கு இடமுண்டு ஆயுதங்களுடன் பழகுபவர்கள் அவதானம் வேண்டும். மேலதிகாரிகளைப் பகைத்துக்கொள்வீர்கள்.

தனு: சாஸ்திர வழியால் நன்மைகள் வந்துசேரும் குடும்பத்தில் தென்றல் வீசும் கவர்ச்சிகரமான நிகழ்ச்சிகளை ரசிப்பதில் காலத்தைக் கடத்துவீர் ஆடம்பரமான வாழ்வை விரும்புவீர்.

மகரம்: அரசபயத்திற்கு இடமுண்டு வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள வேண்டாம். நண்பர் ஒருவர் உம்மைத் தவறான பாதைக்கு அழைத்துச்செல்வர் விபரீதம் ஏற்படலாம்.

கும்பம்: உயர்ந்த எண்ணங்கள் உங்களை புகழின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும் தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும் கால்நடை விருத்திக்கும் இடமேற்படலாம்.

மீனம்: உத்தியோகத்தில் உயர்வுண்டுஉரிமையும் கிடைக்கும். உற்சாகமாகக் கடமையாற்றுவீர். வணிகர்களாயின் வர்த்தகம் சம்பந்தமாக வெளிநாடுசெல்லும் வாய்ப்பு ஏற்படலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## தொடர்விரிவுரை

(யாழ்ப்பாணம்)

வண் வடமேற்கு தாமரை வீதி கோவைடயம்பதி அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் அலங்கார உற்சவத்தின் இன்றைய இரண்டாம் நாள் விழாவிலிருந்து 13ம் நாள் விழா வரை 'கந்த புராணம்' விரிவுரை இடம் பெறும்.

வண்ணை நீராவியடி பிரம்மஸ்ரீ சிவ வை. நித்தியானந்தசர்மா பக்கவாத்திய சகிதம் இவ் விரிவுரையை நிகழ்த்துவார். (கி)


**இ. பாலசுப்பிரமணியம்**
சட்டத்தரணி
52, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

மானிப்பாய், சுதுமலை வடக்கைச்சேர்ந்த காலஞ்சென்ற விஜிசித்தம்பி கந்தையா சேனாதிராஜா என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர் விஜிசித்தம்பி கந்தையா சேனாதிராஜாவின் பெண் பராசக்தி, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
மனுதார்

மரணசாதன ] இல 
நியாயாதிக்கம் ] இல த/3715

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக / மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1983-ஆம் ஆண்டு வைகாசி மாதம் 25ஆந் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகா தென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

தா. குலஞானம்
பதிவாளர்

1983ஆம் ஆண்டு வைகாசி மாதம் 13ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது
7256

வடஇலங்கையில் சகல பொருட்களையும்
தேவைக்கேற்றவாறு பெறுவதற்கு
**அம்பலவாணர் அன் சன்ஸ்**
★ அலங்கார அன்பளிப்பு பொருட்கள்
★ காகிதாதிகள்
★ மின்சார உபகரணங்கள்
★ எலெக்ரோனிக் சாதனங்கள்
அனைத்துக்கும்
சகல பொருட்களும் கொழும்பு விலைக்கே விற்கும் ஒரே நிறுவனம்
**அம்பலவாணர் அன் சன்ஸ்**
(ஒப்பந்தகாரரும் - இறக்குமதியாளரும்)
196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24291 தந்தி- "வாணர் சன்ஸ்"

## இளைஞருக்கு ஆதரவுகொடுப்பதால்

# வவனியா சு.க. அமைப்பாளர் கட்சியிலிருந்துநீங்கவேண்டும்

### வவனியா 'சிவா' கூறுகிறார்

(வவனியா)

வவனியா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் திரு. நடராசாவின் தேர்தலை பகிஷ்கரிக்க கோரும் முடிவு விசித்திரமாக இருக்கிறது நேற்று வரை சு.க உறுப்பினர்களாக தீவிரமாக இயங்கிவந்த திரு. ஏ. பரதநாசன், ஜனுப் பரித் ஆகியோர் இன்று ஐ தே க. வேட்பாளராகப் போட்டியிடுகின்றனர். இவர்களை தடுத்து நிறுத்த முடியாத அமைப்பாளர், தேர்தலை பகிஷ்கரிக்கும் படி மக்களை கோருகின்றார்' வவனியா எம். பி திரு தி. சிவசிதம்பரம், வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது!

'இங்கள ஏகாதிபத்திய அரசு ஐ. தே கட்சியாக இருந்தாலென்ன, சுதந்திரக்கட்சியாக இருந்தாலென்ன இவர்களின் அடக்குமுறை ஆட்சியின் கீழ் இனிமேலும் தமிழ்பேசும் இனம் வாழமுடியாது எனவும், தமிழர் விடுதலை கூட்டணியின் தீவிரம் போதாது என்ற காரணங்களை வைத்து இளைஞர் சக்தி தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

சு. க. வவனியா மாவட்ட அமைப்பாளராக இன்னும் இருந்து கொண்டு திரு மு நடராசா இளைஞர்களின் உணர்ச்சிக்கும், அபிலாசைக்கும் ஆதரவு கொடுக்கத் தயார் என்றும் கூறுவது வேடிக்கைக்குரிய விடயமாகும்.

'இளைஞரின் அபிலாசைக்கும் உணர்ச்சிக்கும் உண்மையான ஆதரவு கொடுக்க திரு. நடராசாவும் அவரது மாவட்டக்கிளையும் இணங்கினால், முதலும் முக்கியமானதும் இவர்கள் சுதந்திரக் கட்சியிலிருந்து ராஜினாமா செய்து வெளியேறவேண்டும். அன்றேல் எமது ஈழத்தனிநாடு கொள்கையை, இவர்கள் சார்ந்துள்ள சுதந்திர கட்சி தலைமைப் பீடம் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள வேண்டும்.

'79-ம் ஆண்டு முதல் கடந்த 4 வருடம், 146 லட்சம் ரூபா வவனியாவின் வருடாந்த வருமானமாக உயர்த்தி மக்களின் அபிவிருத்தித் தேவைகளை நிறைவேற்றச் செய்த தமிழர் விடுதலை கூட்டணியின் நகரசபை நிர்வாகம் இன்று போட்டியிடுகின்ற அபேட்சகர்களை சாதாரண மக்களுக்கு தொண்டு செய்ய முடியாதவர்கள் என அறிக்கை விடுவது தெளிவுள்ள எவரும் கூறக்கூடிய விடயமல்ல.

## தமிழ்மக்கள்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கு அந்நிய ஆட்சியாளர்களுக்கு உரிமையில்லை. என்றும் இத்தேர்தலைப் பகிஷ்கரிப்பதன்மூலம் சிறீலங்கா ஆட்சியாளர்களுக்குக் கீழ்ப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களை இயங்கவிடாமல் செய்யவேண்டும் என்றும், சிறீலங்கா அரசாங்கம் தமிழ் ஈழத்தில் இயங்குவதைத் தடைசெய்யும் முயற்சி இது என்றும் கருதுகின்றது. பதவி நாடாத, தியாக இளைஞர்களுக்கு விடுதலை வீரர்களுக்கு ஆதரவு தருவதுதான் தமிழர்களாக வாழும் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

"அவர்கள் பட்டம் பதவிகளைக் கேட்கவில்லை. தமது போராட்டத்திற்கு தமிழினத்தின் ஒத்துழைப்பைக் கேட்கிறார்கள். இப் போராட்டத்தில் நாமனைவரும் பங்காளர்களாகக் கலந்து கொள்வோம்.

எதிர்வரும் 18ம் திகதி நடைபெறவுள்ள தேர்தலை தமிழ் இனம் முழுமையாக நிராகரிக்க வேண்டும். வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்களிக்க வேண்டாம். தமிழ் ஈழப் போராளிகளுக்கு எமது ஆர்வத்தை விசுவாசத்துடன் காட்டுவோம். தமிழ் இனத்தின் விடுதலை, ஆர்வத்தை, உறுதியை உலகிற்கு வெளிப்படுத்துவோம்.

தேர்தல் தினத்தன்று தமிழ் மக்களை அமைதியாகத் தங்கள் இல்லங்களில் இருக்கும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன் இனத்தின் பாதுகாப்பில் கொண்டுள்ள அக்கறையில் இவ் வேண்டுகோளை விடுக்கின்றேன். தயவு செய்து வாக்களிக்கச் செல்லாதீர்கள். வாக்களிக்கவேண்டாமென்று தமிழ் மக்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்." (ஈ)

## நகைத் திருட்டு...

[5-ம் பக்கத்தொடர்ச்சி]

தரணி கே. விஜயேந்திரா சாட்சிகளில் முரண்பாடுகள் இருப்பதை சுட்டிக்காட்டி எதிரியை விடுதலைசெய்யுமாறு கோரினார்.

நீதிபதி திரு. சீ வி விக்னேஸ்வரன் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

## பூம்புகார் கொலை வழக்கு;

# நீதிமன்றம் வராத

### சாட்சிக்கு பிடிவிறாந்து!

(யாழ்ப்பாணம்)

பூம்புகார் கொலை வழக்கு யாழ் நீதவான் எஸ். நாகராஜா முன்னிலையில்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சாட்சியான சவரிமுத்து யேசு வராததினால் வழக்கு இன்றுவரை ஒத்தி வைக்கப்பட்டது.

நீதிமன்றம் வராத சாட்சிக்குப் பிடிவிறாந்துபிறப்பிக்கப்பட்டது

இவ்வழக்கில் 29-3-82ல் பூம்புகார் அரியாலையைச் சேர்ந்த ம. தியாகராஜா, ஐ ரத்தினம், பொ. மகேந்திரன், பொ, குலேந்திரன், ப. துரைசிங்கம், ம. ஜெயகுமார் மா. மகேந்திரராஜா ஆகியோர் சவரிமுத்து பிமாசஸ் என்பவரை வெட்டிக் கொலைசெய்ததாகவும், சி. திருநாவுக்கரசு கடைக்கு 5000 ரூபாவிற்கு சேதம் விளைவித்ததாகவும். ச. யேசு, சு. சுகுமாரன் ஆகியோருக்கு காயம் விளைவித்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

1ம், 2ம், 3ம். 5ம், 7ம் எதிரிகள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஆர். பி சபாரட்னம், சட்டத்தரணி ரி லிங்கராஜா வின் அனுசரணையுடன் ஆஜரானார். 4ம், 6ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ரி லிங்கராஜா ஆஜரானார். [மா-க]

## விஷப்புகை:
## 5 பேர் பலி!

சென்னை, மே 15

சென்னையில் கிணறு ஒன்றில் விழுந்த மரக்கட்டையை எடுக்க முற்பட்டபோது 5பேர் விஷப்புகைக்கு பலியானார்கள் இவர்களின் சடலங்களை தீயணைப்புப்படையினர் மீட்டனர். [செ]

## உள்ளூராட்சி மன்றத்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தனித் (தகவல்) பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது

இந்த நிலையம் 17, 18, 19-ம் திகதிகளில் தொடர்ந்து இயங்கவுள்ளது.

தேர்தலை ஒட்டி யாழ். மாவட்டத்திலுள்ள பொலிஸ் ஊழியர்களின் லீவுகள் யாவும் கடந்த 14-ம் திகதி தொடக்கம் எதிர்வரும் 22-ம் திகதிவரை ரத்து செய்யப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்தும் விசேஷ பொலிஸ்படை பிரிவொன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களிலும் 5 பொலிஸாரும், 5 இராணுவத்தினரும் பாதுகாப்பில் ஈடுபட்டிருப்பர்.

யாழ். மாநகர சபைக்கு 43-ம் பருத்தித்துறைநகரசபைக்கு 8-ம் வல்வெட்டித்துறை நகரசபைக்கு 8ம், சாவகச்சேரி நகர சபைக்கு 10ம் ஆக 69 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தல் நடைபெறும் 43 வாக்களிப்பு நிலையங்களிலும் கடமையாற்றும் தேர்தல் பொறுப்பதிகாரிகள், மற்றும் உத்தியோகத்தர்கள் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியிலும், யாழ் மத்திய கல்லூரியிலும், கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியிலும், 17ம் திகதி இரவு தங்கியிருப்பர். இந்த மூன்று இடங்களும் பலத்த பாதுகாப்புக்குட்படுத்தப்பட்டிருக்கும்.

18ம் திகதிகாலை முன்னைய தேர்தல் காலங்களைப் போலல்லாது, வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களிலேயே வாக்குச் சீட்டுக்கள், வாக்குப்பெட்டிகள் ஆகியவற்றை பொலிஸ் இராணுவ பாதுகாப்புடன் வாக்குச்சாவடிகளில் கடமையாற்றும் பொறுப்பதிகாரிகள் வாக்குச் சாவடிகளுக்கு எடுத்துச்செல்வர். அன்று பிற்பகல் 5மணியளவில் வாக்களிப்பு முடிவுற்றதும் பஸ்களிலேயே வாக்குப்பெட்டிகளை பொறுப்பதிகாரிகள் யாழ். செயலகத்துக்கு பாதுகாப்பு படையின் உதவியுடன் எடுத்துச்செல்வர்.

பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சாவகச்சேரி நகர சபைகளுக்குரிய வாக்குச்சீட்டு பெட்டிகளும் யாழ். செயலகத்துக்கு எடுத்துவரப்பட்டு வாக்குச்சீட்டுகள் எண்ணப்படும்.

வாக்குச்சீட்டுகள் எண்ணி முடிக்கப்பட்டதும் யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்தப்பட்டு ஒலிபெருக்கிமூலம் அறிவிக்கப்படும்.

யாழ். செயலகத்தில் 18ம் திகதி இரவு வாக்குகள் எண்ணப்படும் போது அனுமதிப் பத்திரம் பெற்றவர்களே அங்கு சமூகமளிக்க அனுமதிக்கப்படுவர் என்று யாழ் தேர்தல் அலுவலகப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (மா)

## யாழ். மாநகர..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(28வது இடம்)ஆகிய இருவரும் யாழ். மாநகராட்சிமன்ற தேர்தலிலிருந்து விலகிக்கொண்டதாக நேற்றிரவு விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

போட்டியிலிருந்து வாபஸ் பெறுவதாக நேற்று அறிக்கை வெளியிட்ட பத்துப்பேருடன் [இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை] யாழ். மாநகராட்சி மன்றத் தேர்தலில் கூட்டணி வேட்பாளர்கள் மொத்தம் இருபத்தொரு வேட்பாளர்கள் இதுவரை வாபஸ்பெற்றுள்ளனர். (மா)

## காந்திய....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கள் சித்திரவதை செய்யப்படுவது தமிழ்மக்களுக்கு கவலையளிக்கிறது அவர்களை வேறு இடங்களுக்கு மாற்றும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இப்படியான சித்திரவதைக்குக்காரணம் பயங்கரவாத தடைச்சட்டமேதான் இச்சட்டத்தை உடன் நீக்கவேண்டும்". (ஈ)

## யாழ். அபிவிருத்தி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ராட்சித் தேர்தல் வேலைகள் காரணமாக கிழக்குமாகாணத்துக்குச்சென்றுள்ளதால் அவரின்செயலாளர் திரு. பேரின்பநாயகம் ஜெர்மன் அபிவிருத்தி நிபுணரை அழைத்துச்சென்றார். மேற்படி அபிவிருத்தி வேலைகளை யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, யாழ் மாவட்ட திட்டமிடல் பிரதிப்பணிப்பாளர் திரு. எஸ் இயதாசன் ஆகியோர் விளக்கினார்கள்.

இன்று யாழ். செயலகத்தில் நடைபெறும் மகாநாடொன்றில் ஜெர்மன் அபிவிருத்தி நிறுவன நிபுணர் திரு பெனடிக்ஸ் உரைநிகழ்த்துவார்.

# 'வான்' மோதிய இளைஞன் ஆஸ்பத்திரியில் மரணம்

(யாழ்ப்பாணம்)

இருசகோதரிகளுடன் ஆஸ்பத்திரியில் மருந்தெடுத்துக் கொண்டுசென்ற இளைஞர் ஒருவர் வான்மோதி மரணமானார்.

அச்சுவேலிவடக்கை சேர்ந்த கந்தசாமி திருச்செல்வம் 18-வயது என்பவரே மரணமானவராவார்.

அச்சுவேலி வல்லை றோட்டில் இந்த விபத்துச்சம்பவம் நடைபெற்றது அந்தவீதியால் வந்துகொண்டிருந்த வான் ஒன்று சைக்கிளை உருட்டிக்கொண்டு சென்ற இரு இளைஞர்களையும் மோதிவிட்டு இரு சகோதரிகளுடன் நடந்துசென்றுகொண்டிருந்த அந்த இளைஞரையும் மோதிவிட்டு தப்பி ஓடும்போழுது அப்பகுதி பொதுமக்கள் வான்சாரதியான வைத்திலிங்கம் சுப்பிரமணியம் என்பவரை கலைத்துப்பிடித்தனராம்.

சைக்கிள் உருட்டிக்கொண்டு சென்ற இரு இளைஞர்களான செல்லையா வரதராசா, சிவலிங்கம் சுதாகரன் ஆகிய இருவரும் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். வான்சாரதியும் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த இளைஞர் திருச்செல்வம் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

மரண விசாரணை நடத்திய பதில் நீதவான் திரு. கனகரத்தினம் கேசவன் பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டுச் சாரதியை இம்மாதம் 23ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி தெரிவித்துள்ளார்.

பதில் சட்டவைத்திய அதிகாரி எஸ்,சரவணபவானந்தன் பிரேத பரிசோதனை செய்தார். (மா)

## நன்றி

இளவாலை இளைப்பாறிய ஆசிரியர் திரு. எஸ். பி. திருச்செல்வத்தின் மரணச்சடங்கில் கலந்தும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் பிரிவில் ஆறுதலும் கூறி நின்ற குருக்கள், துறவியர், நண்பர், உறவினர் அனைவர்க்கும் இதயங்கனிந்த நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறோம்

அன்னாரின் ஆன்மசாந்திக்காக 31ம் நாள் திருப்பலி இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் செவ்வாய் காலை 6 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

பூம்புகார், இளவாலை — 7271 — மனைவி, மக்கள் மருமக்கள்

## மரண அறிவித்தல்

### திருமதி தையல்நாயகி இராசரத்தினம்

சுண்டிக்குளி மகளிர் கல்லூரி இளைப்பாறிய ஆசிரியை தையல்நாயகிஇராசரத்தினம் காலமானார் இவர் காலஞ்சென்ற யாழ் மாநகரசபை சுகாதாரபரிசோதகர் க. இராசரத்தினத்தின் அன்புமனைவியும், தவேந்திரா, பத்மினி, புவனேந்திரா, சந்திரவேந்திரா, இராசேந்திரா ஆகியோரின் அன்புத்தாயாருமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (16-5-83)திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கொக்குவில்கிழக்கு ஆராய்ச்சியாவளவிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல்: ஆர். தவேந்திரா

7271

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு மே மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Poat Office Sri Lanka. under nnmber B. 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telcgram: Eelanadu, Telephone: 22389 — 24126.